**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C No. 108 / 2024 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 7 |

| | | |
|---|---|---|
| Name | : | பிரபு |
| Father's Name | : | சுந்தர்ராஜ் |
| Village | : | தம்பிரான்பட்டி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | மெடிக்கல் ஷாப் |
| Religion | : | இந்து |
| Age | : | 49 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2025.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தம்பிரான்பட்டியில் குடியிருந்து மெடிக்கல் ஷாப் வைத்து தொழில் செய்து வருகின்றேன். புகார்தாரர் செந்தில்குமார் எனது உறவினர். அவர் தற்போது சிங்கப்பூரில் இருக்கின்றார். விபத்தில் இறந்து போன ராஜேந்திரன் எனது அண்ணன் ஆவார். சாட்சி சதீஷை எனக்கு தெரியும். கடந்த 13.01.2023– அன்று இரவு சுமார் 07.30 அல்லது 08.00 மணியளவில் நான் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சூப்பர் மார்க்கெட்டில் மளிகை ஜாமான்கள் வாங்குவதற்காக வண்டியை நிறுத்தி விட்டுஇறங்கினேன். செந்தில்குமாரும், ராஜேந்திரனும், பாளையத்தில் இருந்து ஊருக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். செஞ்சேரியில் இருந்து தம்பிரான்பட்டிக்கு திரும்பும் போது கார் வேகமாக வந்து செந்தில்குமார், ராஜேந்திரன் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அவ்வாறு மோதியதில் ராஜேந்திரன் சென்டர் மீடியனில் மோதி கீழே விழுந்து விட்டார், செந்தில்குமார் காரின் பேனெட்டில்

மோதி கீழே விழுந்து விட்டார். விபத்தினால் செந்தில்குமாருக்கு இரண்டு கால்களிலும் காயங்கள் ஏற்பட்டு விட்டது. காலில் ரத்தக்கசிவு அதிகமாக இருந்தது. ராஜேந்திரன் சுயநினைவின்றி இருந்தார். காயம்பட்ட இருவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். செந்தில்குமாருக்கு காலில் ரத்தக்கசிவு அதிகமாக இருந்ததால் பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். காயம்பட்ட ராஜேந்திரனை மேல் சிகிச்சைக்காக திருச்சி நியூரோ ஒன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். விபத்தை ஏற்படுத்திய கார் வேகமாக வந்து மோதியது, மோதி 10, 15 அடி தள்ளி தான் செந்தில்குமார் பானட்டில் இருந்து கீழே விழுந்தார். விபத்து சமயத்தில் காரை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்க்கவில்லை. விபத்திற்கு யார் காரணம் என்றால் கார் வேகமாக வந்தது தான் காரணம். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**</u>

விபத்திற்கு முன்பு நான் வாகனத்தை விட்டு இறங்கிய சூப்பர் மார்க்கெட் பாளையத்தில் இருந்து வரும் போது இடது பக்கம் உள்ளது. விபத்து சமயத்தில் கார் இருசக்கர வாகனத்தில் மோதியதை நான் பார்த்தேனா என்றால் பார்த்ததினால் தான் நான் அந்த இடத்திற்கு சென்றேன். காரும் இருசக்கர வாகனமும் நேருக்குநேராக மோதியதை நான் பார்க்கவில்லையென்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நடு ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். ராஜேந்திரனும், செந்தில்குமாரும் சென்ற இருசக்கர வாகனத்தை கவனித்து வேறு வாகனங்கள் ஏதேனும் வருகின்றதா என்று பார்த்து விட்டு சென்றிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. செஞ்சேரி மெயின்ரோட்டில் வேகத்தடை எதுவும் இல்லை, பிரிவு ரோட்டில் தான் வேகத்தடை உள்ளது. விபத்து நடந்த இடத்தில் பொதுமக்கள் நிறைய பேர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். இந்த விபத்து

குறித்து புகார் யார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து மருத்துவமனைக்கு நான் உடன் சென்றேன். மேற்கூறிய தகவலை தான் நான் போலீசார் விசாரணையின் போதும் சொன்னேன். போலீசார் என்னை எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். விபத்தானது இருசக்கர வாகனம் ரோட்டின் குறுக்கே கடந்தது கூட ஒரு காரணமாக இருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் காயம்பட்ட செந்தில்குமார், விபத்தில் இறந்து போன ராஜேந்திரன் ஆகியோர் எனக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லையென்றும், சத்தம் கேட்டு தான் சம்பவத்தை நான் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. சதீஷ் என்பவர் என்னுடன் வரவில்லை, ஆனால் அவரை எனக்கு தெரியும்.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**